**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-7-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பொது கலந்தாய்வு தொடங்கியது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இன்று (4-7-2016) பொதுப் பிரிவினருக்கான முதற்கட்ட கலந்தாய்வு பல்கலைக்கழக அண்ணா அரங்கில் தொடங்கியது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் உறுப்பு கல்லூரிகள் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் 13 இளம் அறிவியல் மற்றும் இளம் தொழில்நுட்ப படிப்புகளுக்கான 2,660 இடங்களுக்கு 36 ஆயிரத்து 280 விண்ணப்பங்கள் பெறப்பட்டு கலந்தாய்விற்கான தரவரிசைப் பட்டியல் கடந்த மாதம் 20ம் தேதி வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து கடந்த மாதம் 27-6-2016 அன்று சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெற்றது.

பொதுப்பிரிவினருக்கான முதற்கட்ட கலந்தாய்வு இன்று (4-7-2016) முதல் 10-7-2016 வரை நடைபெறுகிறது. இன்று தொடங்கிய கலந்தாய்விற்கு 1084 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இன்றைய கலந்தாய்வில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி மோகனா 198.50 கட்-ஆஃப் மதிப்பெண்களுக்கு முதலிடம் பெற்று, கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்தில் இளநிலை தொழில்படிப்பு (உணவு மற்றும் பதப்படுத்தும் துறை) தேர்வு செய்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த, செல்வி கலைப்பிரியா 198.25 கட்-ஆஃப் மதிப்பெண்களுக்கு இரண்டாவது இடம் பெற்று, கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்தில் இளநிலை வேளாண்மை பட்டப்படிப்பை தேர்வு செய்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி தேன்மொழி 198 கட்-ஆஃப் மதிப்பெண்களுக்கு மூன்றாவது இடம் பெற்று, கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்தில் இளநிலை வேளாண்மை பட்டப்படிப்பை தேர்வு செய்துள்ளார்.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகளுக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைவேந்தர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் சேர்க்கை ஆணைகளை வழங்கி மாணவிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்